# ஜூன் மாத ராசி பலன்

ஜோதிடர் மோகனபிரியா

Join us on our
WhatsApp/Youtube/Insta/X/Fb



## மேஷம்

மேஷத்திற்கு ஜூன் மாத தொடக்கத்திலேயே ராசி நாதன் செவ்வாய் ஆட்சியாகிறார். இது மிக சிறப்பான ஒன்றாகும். ராசிநாதன் ராசியில் ஆட்சி பெற்று ஸ்தான பலத்தோடு இருப்பது உங்களுக்கு மிக பெரிய பலமாகும். தைரியம் தன்னம்பிக்கை மிகுந்து காணப்படுவீர்கள்.



Join us on our
**WhatsApp/Youtube/Insta/X/Fb**

# மேஷம் - ஜூன் மாத ராசி பலன் தொடர்கிறது...

இரண்டாம் வீடாகிய தன ஸ்தானத்தில் தனாதிபதியாகிய சுக்கிரன் பாக்கியாதிபதியாகிய குருவோடு சேர்ந்து தன ஸ்தானத்திலேயே அமர்வது மிக சிறப்பான தன யோகமாகும். வரவேண்டிய பணம் கைக்கு வந்து சேரும். பொருளாதாரத்தில் இருந்த அனைத்து பிரச்சினைகளும் அகலும். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள், நீண்ட நாட்களாக முடிவுக்கு வராத பிரச்சினைகள் அனைத்தும் முடிவுக்கு வரும். குடும்பத்தில் நிம்மதியும் சந்தோஷமும் பெருகும்.

கௌரவ ஸ்தானாதிபதியாகிய சூரியன் இரண்டில் தன பாக்கியாதிபதிகளோடு சஞ்சரிப்பதும் தன் வீட்டிற்கு பத்தில் சஞ்சரிப்பதும் பிள்ளைகளால் பெருமை கூடும். பிள்ளைகளுக்கு திருமணம் சீமந்தம் போன்ற சுப காரியங்களை நிகழ்த்துவீர்கள். நீண்ட நாட்களாக திருமணம் தள்ளி போனவர்களுக்கு திருமணம் அமைய கூடும். குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிட்டும்.

# மேஷம் - ஜூன் மாத ராசி பலன் தொடர்கிறது...

Join us on our
WhatsApp/Youtube/Insta/X/Fb

இல்லத்தரசிகளுக்கு புதிய உற்சாகம் பிறக்கும். பேச்சில் வலிமை கூடும். குடும்பத்தில் உங்கள் பேச்சுகளுக்கு மதிப்பும் மரியாதையும் கூடும்.

மாணவர்கள் படிப்பில் நல்ல முன்னேற்றம் அடையும் காலம். விரும்பிய பள்ளி கல்லூரிகளில் விரும்பிய பாடத்திட்டத்தினை தேர்வு செய்து கொள்ள கிரக நிலைகள் சாதகமாக உள்ளது.

ஜீவன ஸ்தானாதிபதியாகி சனி லாபஸ்தானத்தில் ஆட்சி பெற்று ராசியை பார்ப்பது பொருளாதாரத்தை மேம்படுத்தும். செய்யும் தொழில்களில் லாப மேன்மை அடைய செய்யும்.

ஆறு பனிரெண்டு அச்சுக்களில் ராகு கேது சஞ்சரிப்பதும் குருவின் வீட்டில் ராகு அமர்ந்து குருவின் பார்வையில் கேது அமர்வது மிக சிறப்பான ஒரு கிரக அமர்வாகும். தீரா கடன்கள் அடைய பெரும். சுபக்கடன்கள் உண்டானாலும் அதனால் வாழ்வில் முன்னேற்றம் கூடும்.

# மேஷம் - ஜூன் மாத ராசி பலன் தொடர்கிறது...

Join us on our
WhatsApp/Youtube/Insta/X/Fb

மேஷத்திற்கு ஆறுக்கு அதிபதியாகி புதன் தனது நண்பரான சூரியனோடு சேர்ந்து மற்றொரு நண்பரான சுக்கிரனின் வீட்டில் குருவோடு சேர்ந்து சுபத்துவமாகி அமர்வது மிகுந்த நற்பலன்களை உண்டாக்கும். அந்நிய நாடுகளின் மூலம் பொருளீட்டும் யோக்கியம் கூடும். எப்பொழுதோ போட்ட முயற்சிகளுக்கு கூட இப்பொழுது பலன்களை அறுவடை செய்ய முடியும்.

மிக நீண்ட காலத்திற்கு பிறகு மேஷ ராசியினருக்கு இந்த மாதம் அனைத்து கிரகங்களும் மிக சாதகமாக அமைய பெற்று இருக்கிறது. உங்கள் சுய ஜாதக தசா புத்தி நன்றாக இருக்கும் நிலையில் இந்த கோட்சார கிரக அமர்வு வாழ்க்கையில் மறக்க முடியாத நற்பலன்களை வாரி வழங்குவதாக அமையும்.

**மொத்தத்தில் மேஷ ராசியினருக்கு இந்த மாதம் தொட்டதெல்லாம் துலங்கும் மிக சிறப்பான காலம். பயன்படுத்தி கொள்ளுங்கள்.**

**அதிர்ஷ்ட நாட்கள்: 4,5,6,7,13,14,23,24,25,26**